மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இரண்டாம் பகுதியில் தமிழ், உருது, இந்தி கற்றுக் கொடுக்கப்படும் என்ருர்கள். இந்திப் படிப்பு சொல்லிக் கொடுக்கப் போவதில்லை என்று சொல்லிக் கொள் கிறேன்.

Employment Officers—Employers contact

*406 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the details of the scheme of Employment Officers contacting employers adopted in Employment Exchanges?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிலதிபர்களுடன் தொடர்பு கொள்வது வேலை வாய்ப்பு அதிகாரிகளின் முக்கியமான அலுவல்களில் ஒன்று. உயிர்ப் பதிவேடுகளில் விண்ணப்பதாரர்களைக் கொண்டு பதவிக் காலியிடங்களை நிரப்புவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு மட்டுமின்றி மாவட்டத்தில் உள்ள ஆள்பலம் குறித்துத் தொழிலதிபர்களுக்குத் தக வலும், புள்ளி விவரமும் தருவதற்காகவும் இந்தத் தொடர்பு வேண்டி யுள்ளது. 1959-ம் ஆண்டு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் (பதவிக் காலியிடங்களைக் கட்டாயமாக அறிவித்தல்) சட்டத்தைச் செயல்படுத்துவதும் தொழிலதிபர்கள் தங்கள் தரப்பில் கடமைகளை நிறைவேற்றுவதும் இத் தொடர்பின் மற்றொரு நோக்கமாகும்.

இத்தகைய தொடர்புகளைப் பலனளிக்கத் தக்க வகையாகச் செய் வதற்கென பொதுத்துறையிலும், 10 அல்லது 10-க்கு மேற்பட்ட தொழி லாளர்களை வேலைக்கமர்த்தியுள்ள தனிப்பட்ட நிறுவனங்களிலும் உள்ள எல்லாத் தொழிலதிபர்களின் பட்டியல் ஒன்றை வேலைவாய்ப்பு அதி காரிகள் அனைவரும் வைத்து வருகின்றனர். எல்லா நிறுவனங்களும் படிப்படியாகத் தொடர்பு கொள்வதற்கு இவ்வதிகாரிகள் திங்கள் தோறும் தொடர்புத் திட்டம் வகுத்துக் கொள்கின்றனர். பட்டியலில் உள்ள எல்லாத் தொழிலதிபர்களையும் அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறையாகிலும் தொடர்பு கொள்ளும் வகையில் தொடர்புத் திட்டங்கள் வகுக்கப்படு கின்றன.

திரு. பி. வேலுசாமி : சென்ற ஆண்டு இந்த வேலை வாய்ப்பு அலு வலகத்தில் பதிவு செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் ? அவர்களில் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது ? எவ்வளவு பேர்களுக்கு கிடைக்காமல் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தகவல் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு தேடித் தரும் நிறுவனங்களிடம் தனியார் துறையில் தொழில் ஆரம்பிக்கிறவர் கள் இவைகளையெல்லாம் தெரிவிக்க வேண்டுமென்று இருந்தும்கூட பொதுவாகப் பல இடங்களில் இருந்தும் அப்படிப்பட்ட தகவல்களை அந்த அதிகாரிகளுக்குத் தருவதில்லை. அவரவர்களே நியமித்துக் கொள்கிருர் கள். ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கும் இந்த நேரத்தில் இந்த நிறுவனங்கள் மூலமாக அதிக வேலைகளை தேடித் தர முடியும். எனவே எல்லா தனியார் துறை நிறுவனங்களும் வேலை தேடித் தரும் அலுவலகங்களில் இருந்துதான் வேலைக்கு ஆட்களைக் கேட்க வேண் டும் என்ற ஒரு கண்டிப்பான உத்தரவை அரசு இடுமா ? அதை மீறுகிறவர்களுக்கு ஏதாவது தண்டனை கொடுக்க இந்த அரசு முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி சட்டத்தில் தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து தகவல் பெறக் கூடிய அதிகாரம்தான் அரசுக்கு தரப்பட்டிருக்கிறது. கட்டாயப்படுத்துவதற்கு அரசியலமைப்புச் சட்டத்தின்படி முடியாது.

1969 மார்ச் 21]

திரு. ஏ. சி. நரசிம்மன் : பல கூட்டுறவு நிறுவனங்கள் தாங்களாகவே நியமனம் செய்து கொள்கிறார்கள். அவர்கள் எம்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலம் விண்ணப்பங்களை வரவழைத்து நியமனங்கள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது பற்றிய தகவல் இல்லை.

சுந்தரராஜபுரம் அருகிலுள்ள குறுகிய பாலம்

* 407 **வினா.— திரு. பெ. மலைச்சாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் வட்டம், சுந்தரராஜபுரத்திற்கு அண்மையில் உள்ள பெரியாற்றுக் கால்வாயில் கட்டப்பட்டுள்ள மிகக் குறுகிய பாலத்தை விரிவாக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை தொடங்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) சுந்தரராஜபுரத்திற்கு அருகில் பெரியார் கால்வாயில் கட்டப்பட்டுள்ள குறுகிய பாலத்தை மேம்படுத்துவதற்காகவும் அகலப்படுத்துவதற்காகவும் ரூபாய் 8,000 செலவில் மதிப்பீடு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(இ) அவ்வேலை நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.

Retired Supervising staff of Public Works Department

* 408 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Hon. the Chief Minister has received any petition signed by a couple of retired Supervising staff of State Public Works Department on 31st May 1968 requesting him to reconsider their demand of liberalised pension scheme and other retirement benefits; and

(*b*) if so, the action taken by the Government so far?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஆம். அம்மனுசார்புள்ள தலைமைப் பொறியாளர்களுக்கு அனுப்பப்பட்டது. எனெனில் மேற்சொன்ன மனுவைக் கொடுத்த மேற்பார்வையாளர்கள் பொறியியல் பட்டறையில் வேலை ரீதியில் ஊதியம் பெறுபவர்களாக இருந்தமையால் அவர்கள் ஓய்வு கால ஊதியமில்லாத ஊழியர்களாகக் கருதப்பட்டு, 1960-ம் ஆண்டின் தமிழ்நாட்டுத் தாராள ஓய்வு கால விதிகள் அவர்கட்குப் பொருந்தாது என்பதை அரசு ஏற்கனவே தலைமைப் பொறியாளருக்கு அறிவித்துள்ளது.

Dr. H. V. HANDE : Is it a fact that after that, the Chief Engineer wrote a letter to Government? While the G.O. on the liberalised pension scheme is applicable to the C.P.W.D. staff of the same category, why is it not made applicable to the P.W.D. staff, taking into consideration the recommendations contained in Chief Engnieer's letter No. C.E. 1/76/379, dated 5th March 1962?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ; அதுபற்றிய விவரம் தற்போது என்னிடமில்லை.